ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

Statement No: HRC/S/i/T/03/02/26

# இலங்கையில் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரம் மற்றும் நிகழ்நிலை காப்பு குறித்த அறிக்கை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (இ.ம.ஆ), இலங்கையில் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரத்திற்கு, குறிப்பாக ஊடகவியலாளர்கள் தங்கள் தொழிலில் தலையீடு இல்லாமல் ஈடுபடுவதற்கான சுதந்திரத்திற்கு, அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருவது குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது. சட்ட அமுலாக்கல் அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட, அவதூறான பேச்சு போன்ற சார்த்துதல்கள் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ள ஒரு போக்கு மிகவும் கவலையளிக்கிறது. மோசமான உதாரணரமொன்றாக அண்மையில், ஊடகவியலாளரும், கருத்துத் தெரிவித்தற் சுதந்திரம் தொடர்பான ஆணைக்குழுவின் உபகுழு உறுப்பினருமான திரு. தரிந்து ஜயவர்தன, அத்தகைய அழைப்பாணைக்கான காரணங்கள் முறையாக வெளிப்படுத்தாமல் பொலிஸ் விசாரணையொன்றுக்காக அழைக்கப்பட்டார். பொது நிதியைப் பயன்படுத்துவதில் ஊழல் குறித்து திரு. ஜயவர்தன தனது வெளியீடுகளில் அவதூறான கருத்துக்களை வெளியிட்டதாகக் கூறப்படும் முறைப்பாட்டின் காரணமாக இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டது என்பது பின்னர் தெரியவந்தது. 2025 ஜூலை 2 ஆம் திகிதியன்று பொலிஸ் மாஅதிபர் வெளியிட்ட RTM 101/CRTM 61 சுற்றறிக்கை அனைத்து புலன்விசாரணை அதிகாரிகளும் அழைப்பாணை அனுப்புவதற்கான காரணங்களை நபர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என பணிப்புரை விடுப்பதோடு, ஒரு நபருக்கு அத்தகைய அழைப்பாணை அனுப்புவதற்கான காரணங்களை பொலிஸ் தெரிவிக்கத் தவறினால், அது சுற்றறிக்கையை மீறுவதாகும் என்றும் ஆணைக்குழு குறிப்பிடுகிறது.

இலங்கை அரசியலமைப்பின் 14(1)(அ) உறுப்புரையினால் இலங்கையில் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம், உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்து பிரஜைகளுக்கும் அவர்களின் எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கும், ஜனநாயகத்தில் பங்கேற்பதற்கும் உள்ள முக்கியமான ஒரு அடிப்படை உரிமையாகும். நிகழ்நிலை தளங்கள் உட்பட எந்த ஊடகம் மூலமாகவும் செய்யப்படும் அனைத்து அமைப்பிலுமான வெளிப்படுத்தல்களை இந்த உரிமை

பாதுகாக்கிறது. இலங்கை உயர் நீதிமன்றத்தின்படி, உரிமையானது 'சாதகமாகப் பெறப்பட்ட அல்லது பாதிப்பில்லாததாகக் கருதப்படும் தகவல் அல்லது கருத்துக்களை மட்டுமல்ல... அரசையோ அல்லது மக்களின் எந்தவொரு பிரிவினரையோ பாதிக்கின்ற, அதிர்ச்சியூட்டும் அல்லது தொந்தரவு செய்யும் தகவல்களையும்' பாதுகாக்கிறது.

கருத்துத் தெரிவித்தற் சுதந்திரம் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கலாம், ஆனால் இவை அரசியலமைப்பின் 15(2)ஆம் உறுப்புரை மற்றும் 15(7) ஆம் உறுப்புரை என்பவற்றின் பிரகாரம் சட்டரீதியானதாக மட்டுமே இருக்க வேண்டும். கருத்துச் சுதந்திரத்தின் மீதான ஒவ்வொரு கட்டுப்பாடும் தேவைப்பாடு, விகிதாசாரம் மற்றும் நியாயத்தன்மை ஆகியவற்றின் தரங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தெளிவாகக் கூறியுள்ளது. கருத்துச் சுதந்திரத்தின் மீதான தேவையற்ற, விகிதாசாரமற்ற மற்றும் நியாயமற்ற கட்டுப்பாடுகளில் உள்ள சமூக ஆபத்தையும் ஆணைக்குழு குறிப்பிடுவதோடு அத்தகைய கட்டுப்பாடுகள் பொது விரக்திக்கும் அமைதியின்மைக்கும் கூட வழிவகுக்கும் எனவும் குறிப்பிடுகின்றது.

உறுப்புரை 15(2) இன் கீழ் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தக்கூடிய காரணங்களில் ஒன்று அவதூறாகும். எனவே, ஒவ்வொரு நபருக்கும் அவர்களது நற்பெயர் மற்றும் அந்தரங்கத்திற்கான உரிமையை உத்தரவாப்படுத்துவதற்கும், அவதூறுகளிலிருந்து நபர்களைப் பாதுகாப்பதற்கும் அவசியமான, பக்கச்சார்பற்ற மற்றும் நியாயமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். இது தொடர்பான குடியியல் நீதிமன்றங்களின் உத்தரவுகள் மற்றும் தீர்ப்புகள் அத்தகைய கட்டுப்பாடுகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும். மேலும், ஊடகவியலாளர்கள் மற்றும் பதிப்பாசிரியர்கள் உட்பட அனைத்து நபர்களும் தமது கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்தும்போது மற்றவர்களின் உரிமைகள் மற்றும் நற்பெயர்கள் தொடர்பாக 'விசேட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்' கொண்டுள்ளனர். இந்த நெறிமுறை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச கட்டுறுத்தின் உறுப்புரை 19(3) இல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆதலால், ஊடகவியலாளர்களும் பதிப்பாசிரியர்களும் வெளியிடப்பட்ட உள்ளடக்கம் துல்லியத்திற்காக சரிபார்க்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்பதோடு மேலும் அனைத்து தரப்பினரும் தங்களுக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து கருத்து தெரிவிக்க அல்லது பதிலளிக்க வாய்ப்பளிக்க வேண்டும். தவறான தகவல்கள் வெளியிடப்பட்டதாகக் கண்டறியப்பட்டால், திரும்பப் பெறுதல் மற்றும் மன்னிப்பு கோருதல்கள் தாமதமின்றி வெளியிடுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், அவதூறைத் தடுப்பதன் அடிப்படையில் கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் குற்றவியல் தண்டிப்புக்களின் வடிவத்தில் இருக்கலாம் என்றதொரு பொதுவான தவறான கருத்து உள்ளது. மாறாக, ஒரு நபரின் பேச்சு அவதூறை கொண்டிருக்கலாம் என்ற அடிப்படையில் இடப்படும் எந்தவொரு கட்டுப்பாடும் குடியியல் நீதிமன்றங்களின் பிரத்தியேக ஏற்பாடொன்றாகவே தொடர்ந்தும் உள்ளது. அவதூறு தொடர்பாக எந்த குற்றமும் தற்போது இலங்கை

குற்றவியல் சட்டத்தின் கீழ் இல்லை. உண்மையில், 2002 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டம், இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தை முழுமையாக நீக்கியது, அதாவது, அவதூறு பற்றிய அத்தியாயம். எனவே, அவதூறு தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்க இலங்கை பொலிசுக்கு எந்த சட்டஅதிகார வரம்பும் இல்லை. அவதூறு தொடர்பான முறைப்பாடுகளை அது ஏற்கவோ அல்லது விசாரிக்கவோ கூடாது. அவதூறுச் செயலால் பாதிக்கப்பட்ட எந்தவொரு பிரஜையும் இலங்கையின் குடியியல் நீதிமன்றங்களில் மட்டுமே தீர்வு காண முடியும், மேலும் இது தொடர்பாக குற்றவியல் முறைப்பாடுகளை தாக்கல் செய்யக்கூடாது.

அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் செல்வாக்குமிக்க நபர்கள், அவர்களைப் பற்றி பிரஜைகள் பிழையான அல்லது அவதூறான கூற்றுக்களை அநேகமாக நிகழ்நிலை தளங்கள் ஊடாக சார்த்துதல் செய்துள்ளார்கள் எனக்கோரி கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு உட்பட குற்றவியல் விசாரணைத் திணைக்களம் அல்லது இலங்கை பொலிஸின் ஏனைய பிரிவுகளில் முறைப்பாடுகளை தாக்கல் செய்ய முயன்ற ஒரு போக்கை ஆணைக்குழு அவதானிக்கின்றது. அரசியல் தலைவர்கள் மற்றும் அரசாங்க அலுவர்கள் போன்ற பொது நபர்கள், தனி ஆட்களை விட அதிக விமர்சனங்களை சகித்துக்கொள்ள வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் தராதரங்கள் தேவைப்படுத்துகின்றது என்பதை ஆணைக்குழு நினைவுபடுத்துகிறது. குறிப்பாக, இதுபோன்ற பொது நபர்கள், பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தை மதிப்பதற்கான விசேடமான பொறுப்புக்களை கொண்டிருப்பதால் சார்த்துதல்செய்யப்பட்டதான அவதூறான கூற்றுக்கள் குறித்து விசாரணைகளைத் தொடங்க சட்ட அமுலாக்கள் அலுவலர்களை நம்பியிருப்பதை விசேடமாக தவிர்த்துக்கொள்ள வேண்டும். பெரும்பாலும், இதுபோன்ற பொது நபர்கள் குறித்து தவறான அல்லது நியாயமற்ற அறிக்கைகள் வெளியிடப்படலாம். எவ்வாறாயினும், சட்ட அமுலாக்கல் அலுவலர்களை நம்புவதற்குப் பதிலாக, அதிகாரப்பூர்வ விளக்கங்களை வழங்குவது போன்ற பக்கச்சார்பற்ற வழிமுறைகள் மூலம் அத்தகைய கூற்றுக்களுக்கு பதிலளிப்பது அவர்களது பொறுப்பாகும். ஆணைக்குழு கடந்த காலங்களிலும் நாட்டில் அரசியல் பதவிகளில் உள்ள பெண்களைப் பற்றிய கருத்துரைகள் சமூக ஊடகங்களிலும் பாரம்பரிய ஊடகங்களிலும் அடிக்கடி தீங்கானவையாக இருந்துள்ளதை அங்கீகரித்துள்ளது. . இருப்பினும், இந்த மிகக் கடுமையான பிரச்சினையைச் சமாளிப்பதற்கு குற்றவியல் சட்டத்தை தவறாக பயன்படுத்துவது அல்ல, மாறாக நீண்டகால சமூகத் தலையீடுகள் தேவைப்படுகின்றன.

இந்தச் சூழலில், 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலை காப்புச் சட்டம் (நி.கா.ச) தொடர்பாக ஆணைக்குழு பல அவதானங்களை தெரிவிக்க விரும்புகிறது. தற்போதைய சட்டமானது நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாகப் பின்பற்றவில்லை என்றும், தற்போதைய சட்டம் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் மட்டுமே இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஆணைக்குழு முன்னாள் சபாநாயகருக்கு

முன்னர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. இந்தச் சூழலில், அவதூறுகளைத் தடுப்பது உட்பட எந்தவொரு பிரஜையினதும் கருத்துச் சுதந்திரத்தையும் நசுக்க இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவது தொடர்பான அரசியலமைப்புசார் சட்டத்தன்மை குறித்த கடுமையான கேள்விகளை எழுப்புகிறது.

நிகழ்நிலை காப்பு என்பது ஒரு சட்டபூர்வமான நோக்கம் என்றும், நிகழ்நிலை காப்பின் உண்மையான நோக்கத்திற்காக, குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பயனர்களுக்காக, நிகழ்நிலை தளங்களை ஒழுங்குபடுத்துவது அவசியமாக இருக்கலாம் என ஆணைக்குழு கருதுகிறது. இருப்பினும், தற்போதைய நி.கா.ச இந்த நோக்கத்தை ஏய்தவில்லை. அதன் ஏற்பாடுகள் தண்டனைச் சட்டக்கோவையில் காணப்படும் காலனித்துவ கால குற்றவியல் தவறுகளை பிரதிபலிக்கின்றதோடு மற்றும் ஃபிஷிங், ஸ்பைவேய்யர், மால்வேர், சேவை மறுப்பு தாக்குதல்கள் மற்றும் ஹேக்கிங் போன்ற பல உண்மையான நிகழ்நிலை காப்பு சிக்கல்களை சரியான முறையில் கையாளத் தவறுகின்றது. அண்மையில், சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் ஒரு ஆலோசனையை நடத்திய ஆணைக்குழு, நி.கா.ச நீக்கப்பட வேண்டும் என்ற பரந்த இணக்கப்பாடான கருத்தை அவதானித்தது. நிகழ்நிலை காப்பு குறித்த புதிய சட்ட ஏற்பாடுகளை வரைவதற்கான எந்தவொரு செயல்முறையும் ஆலோசனை சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதோடு அத்தகைய ஏற்பாடுகள் நோக்கத்திற்கு ஏற்றவை என்பதை உறுதிப்படுத்த பொருத்தமான அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைப் பெற வேண்டும்.

இலங்கை அரசியலமைப்பு மற்றும் தொடர்புடைய சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு முழுமையாக இணங்க, கருத்துச் சுதந்திரத்தின் மதிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய, இலங்கை அரசாங்கமும் தொடர்புடைய அதிகாரவமைபுக்களும் பின்வரும் நடவடிக்கைகளை கைக்கொள்ள வேண்டும் என்று ஆணைக்குழு பரிந்துரைக்கிறது:

1. நிகழ்நிலை காப்புச் சட்டம் நீக்கப்பட்டு, பொருத்தமான சட்ட ஏற்பாடுகளால் பதிலீடுசெய்யப்படும் வரை, நீதி அமைச்சு அதன் பயன்பாட்டுக்கான தடையொன்றை பிரகடனம்செய்ய வேண்டும்;

2. இலங்கையில் அவதூறு ஒரு குற்றவியல் தவறு அல்ல என்பதை இலங்கை பொலிஸின் அனைத்து பிரிவுகளுக்கும் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கும் நினைவூட்டி பொலிஸ் மாஅதிபர் பணிப்புரைகளை விடுத்தல் வேண்டும் என்பதோடு; மேலும் கூறப்படும் வேறு எந்த குற்றமும் நியாயமாக சந்தேகிக்கப்படாத இடங்களில், அவதூறு தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதையோ அல்லது விசாரிப்பதையோ தவிர்க்க வேண்டும் எனவும் பணிப்புரைகளை விடுத்தல் வேண்டும் மற்றும்

3. அரசியல் தலைவாகள், பொய்யான அல்லது அவதூறானதாகக் கூறப்படும் சாட்டப்படுகின்ற எந்தவொரு கூற்று தொடர்பாகவும் சட்ட அமுலாக்கல்

அலுவலர்களிடம் முறைப்பாடுகள் அளிப்பதைத் தவிர்க்க வேண்டும், ஏனெனில் அத்தகையதொரு கூற்று ஒரு குற்றவியல் தவறாக கருதப்படாது.

## தலைவர்

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

2026.02.03